# 30. முப்பால் (திருக்குறள்)

முனைவர் இரா. விஜயன்
உதவித் தமிழ்ப்பேராசிரியர்,
கொங்குநாடு கலை அறிவியல் கல்லூரி
கோவை.

## நூல் தொகுப்பும் பகுப்பும்

பன்னிரு பாட்டியல் கீழ்க்கணக்கு நூலின் இலக்கணம் பற்றிக் குறிப்பிடுகையில்,

''அறம் பொருள் இன்பம் அடுக்கி அவ்வத்
திறம்பட விடுவது கீழ்க்கணக்கு'' (348)

என்று எடுத்துரைக்கிறது.

நீதி நூல்களுள் திருக்குறள் பாடல் தொகையில் பேரெல்லை உடைத்தாயிருத்தலோடு அவற்றுள் தலைசிறந்தும் விளங்குவது ஆதலின் கீழ்க்கணக்கு நூல்களில் முதன்மையான தாகப் போற்றப்படுகிறது. கீழ்க்கணக்கு நூல்களுள் மானுட எல்லைகளைக் கடந்து சாதி, சமய வேறுபாடு இன்றிப் போற்றப் பெற்று வந்துள்ள நூல் திருக்குறள் ஒன்றே. இதன் சொல்லையும், தொடரையும், பொருளையும் எடுத்தாளாதவர் இடைக்காலத் திலும் பிற்காலத்திலும் எவரும் இல்லை எனலாம். மனு முதலிய நீதி நூல்கள் ஓர் இனம் சார்ந்து இயங்கி, பிறப்பால் உயர்வு, தாழ்வு கற்பித்து வந்தபோது குறள் மட்டுமே மானுட மனம் சார்ந்து இயங்கி, பிறப்பை அனைவருக்கும் சமமாய் முன்நிறுத்தியது.

''பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும் சிறப்பொவ்வா
செய்தொழில் வேற்றுமை யான்'' (குறள் : 972)

## தொன்மையும் காலமும்

செவ்வியல் மொழி இலக்கியக் கூறுகளில் ஒன்றாய் முதன்மையான முன்நிறுத்தப்படுவது நூலின் தொன்மையும் காலமும் ஆகும்.

பதினெண் கீழ்க்கணக்கில் வகைப்படுத்தப்பட்ட திருக்குறள் தொல்காப்பியர் காலத்து இலக்கியம் ஆகும். உறுதியாகக் கூறின் திருக்குறளின் காலம் கி.மு. 31 அல்லது அதற்கு முன்பாகவே இருத்தல் வேண்டும். திருவள்ளுவரின் சொல்லாட்சி, பொருளாட்சிகளினாலும் அவரது காலத்தை நன்கு உணரலாம். சங்க நூல்களில் காணலாகும் சொல்லாட்சிக்கும், திருக்குறளின் சொல்லாட்சிக்கும் வேறுபாடு ஏதுமில்லை.



## செவ்வியல் சொல்லாட்சி

வாய்மொழிப் பாடல்களில் குறிக்கத்தக்க இயல்பானது ஒரு சொல்லே மீண்டும் மீண்டும் வந்து பொருள் சிறக்க வைக் கும் சொல்லாட்சித் திறன் ஆகும்.

''பற்றுக பற்றற்றான் பற்றினை அப்பற்றைப்
பற்றுக பற்று விடற்கு'' (குறள் : 350)

''சொல்லுக சொல்லிற் பயனுடைய சொல்லற்க
சொல்லிற் பயனிலாச் சொல்'' (புறம் : 200)

''துப்பார்க்குத் துப்பாய துப்பாக்கித் துப்பார்க்குத்
துப்பாய தூஉம் மழை'' (குறள் : 12)

''இடும்பைக்கு இடும்பை படுப்பர் இடும்பைக்கு
இடும்பை படாதஅ தவர் '' (குறள் : 623)

''இன்மையின் இன்னாதது யாதெனின் அறம்பிற
இன்மையே இன்னா தது'' (குறள் : 1041)

''பொய்யாமை பொய்யாமை யாற்றின் அறம்பிற
செய்யாமை செய்யாமை நன்று'' (குறள் : 297)

மேலும், செவ்வியல் இலக்கியச் சொல்லாட்சிகளில் பயின்று வரும் எதிர்மறைச் சொற்களின் தலைப்பாடானது, தொடக்கத் தில் வாய்மொழியாகப் பல்லாற்றானும் வெளிப்பட்டு அதன் தாக்கமாய் இலக்கியமாய் வரி வடிவம் ஏற்கும்போதும் அதன் தன்மை சிதறாது வெளிப்பட்டு நிற்கும் என்பது மொழியியலாளர் களது கருத்து. இக்கூற்றுப்படி திருக்குறள் எழிலார்ந்த எதிர்மறைச் சொற்களை வெளிப்படுத்தி, செவ்வியல் இலக்கியத்தின் தனி இடம் தனக்கெனத் தக்க வைக்கிறது.

கடை, தலை எனவும், நன்று, தீது எனவும், இனிது, கடன், உலக, காட்சியர் எனக் குறளின் இறுதிச் சொற்களாகக் கொண்டு பல குறள்கள் அமைந்துள்ளன.

செவ்வியல் இலக்கியங்களின் தனியொரு பண்பான வினா விடை வடிவமும், உவமை நயமும் திருக்குறளில் வெளிப்படுவது, செவ்வியல் இலக்கியத்தின் திருக்குறள் பெற வேண்டிய தனித்துவத்தை வலியுறுத்துகிறது. வினா விடை வடிவைக் கையாளும்போது திருக்குறள்,

"அறவினை யாதெனின் கொல்லாமை கோறல்
பிறவினை எல்லாம் தரும்." (குறள் : 321)

"வகைமாண்ட வாழ்க்கையும் வான்பொருளும் என்னாம்
தகைமாண்ட தக்கார் செறின்" (குறள் : 897)

"சிறைகாக்கும் காப்பு எவன் செய்யும் மகளிர்
நிறைகாக்கும் காப்பே தலை" (குறள் : 57)

என்று செவ்வியல் இலக்கியப் பண்பைத் திருக்குறள் முழுவதும் பூர்த்தி செய்கிறது. பெருங்காப்பியங்களுக்கு மட்டுமே உவமைநயம் சாத்தியம் ஈரடியில் உவமைநயம் பாராட்ட முடியாது என்பது காலந்தோறும் பலர், திருக்குறள் செவ்வியல் இலக்கிய வகையில் சேர்க்கத் தயங்கி எழுப்பி வரும் கேள்வி இதுவாகும். இதற்கு விடைகாண முயலின் திருவள்ளுவர் குறள் வெண்பாவைத் தமது நூலுக்கெனத் தேர்வு செய்ததற்குக் காரணம் சுருங்கச் சொல்லிப் பொருள் விளங்க வைத்தல் ஆகும். குறுகிய குறளிலும் அணிநயம் பொருந்த மிகப்பல பாக்களை இயற்றியுள்ளார். உவமைநயம் உண்டா? என்பதற்குச் செவ்வியல் பெருங்காப்பியங்கள்கூட ஈரடியில் பின்வரும் குறளைப் போன்று உவமைகளைக் கையாண்டிருக்குமா என்பதே இனித் தமிழர் களான நாம் எழுப்பவேண்டிய கேள்வி. ஒரே குறட்பாவில் ஐந்து உவமைகளை அமைத்துத் தன்னிகரில்லாத் தனிப்பெரும் செவ்வியல் இலக்கியம் திருக்குறள் என்பது உலகம் இனி அழைக்கு முகமாக,

"முறிமேனி முத்தம் முறுவல் வெறிநாற்றம்
வேலுண்கண் வேய்த்தோள் வட்கு" (குறள் : 1113)

இளந்தளிர் போன்றமேனி, முல்லை போன்ற புன்முறுவல், இயற்கை மணம் உடலில், வேல் போன்ற கண், மூங்கில் போன்ற தோள் என்று பல அடிகளில் பெருங்காப்பியங்கள்



விளக்கியதை ஈரடியில் திருவள்ளுவர் விளக்கி இருப்பது ஈண்டிங்கு நோக்கத்தக்கது. செவ்வியல் இலக்கியக் கூறுகளின் சொல்லாட்சி மட்டுமன்று; அம்மொழிகளின் வாய்மொழிப் புராணக் கதைகளும், அக்கதைப் பாத்திரங்களின் ஆளுமையும், செவ்வியல் இலக்கியத்தில் வெளிப்பட்டு நிற்கும் எனும் கூற்றையும் திருக்குறளில் நாம் கண்டுணரலாம். திருக்குறளில் புராணக் கதைகளும், அக்கதைப்பாத்திரங்களின் ஆளுமையும், செவ்வியல் இலக்கியத்தில் வெளிப்பட்டு நிற்கும் எனும் கூற்றையும் திருக்குறளில் நாம் கண்டுணரலாம். திருக்குறளில் புராணக் கருத்துகளா எனில் குறள் புராணம் பேசவில்லை. மாறாகச் சமூகம் அறிந்த புராணப் பாத்திரங்களின் வழியாக நீதியை எளிதாய் எடுத்துரைக்கிறது. கிரேக்க, இலத்தீன் செவ்வியல் இலக்கியங்களின் பெருங்காப்பியங்களைக் காணின் புராணக் கதைகளும் அதன் தெய்வங்களும் காப்பியங்களோடு இணைந்தே இயங்கும் தன்மையைக் காணலாம். திருக்குறளிலும் இத் தன்மையைப் பின்வரும் குறள் வழியாகத் தெள்ளிதின் அறியலாம்.

## செவ்வியல் இலக்கியங்களோடு ஒப்பீடு

உலகச் செவ்வியல் இலக்கியங்கள் மொழியால் வேறுபட்டு இருப்பினும் கருத்தமைவில் தம்முள் ஒப்புமை கொண்டு விளங்கும் தன்மை செவ்வியல் இலக்கியங்களை எளிதாய் அடையாளம் காண உதவுவதோடு செவ்வியல் இலக்கியங்களின் பொதுத்தன்மை இதுவெனப் பாருக்குப் பறைசாற்றி நிற்கும் திறத்திலிருந்து அறிந்து கொள்ளலாம். 'ஒடு 0' என்பது கிரேக்க ஓமருக்குப் பின்பு தோன்றிய கிரேக்கப் பெருங்கவிஞரின் பெயராகும். ஈசியொடு (Hesiol) ஆகும். ஈசியொடுவின் செவ்வியல் இலக்கியப் படைப்பான வேலையும் நாட்களும் (Work and days) எனும் நூல், நீதிபோதனைக் கருத்துகளைத் தன்னகத்தே கொண்டது. கிரேக்க நீதி இலக்கியமான ஈசியொடின் படைப்பை, கருத்தடிப்படையில் திருக்குறளோடு ஒப்பிடலாம்.

| ஈசியொடு<br>(வேலையும் நாட்களும்) | திருவள்ளுவர்<br>(திருக்குறள்) |
|---|---|

| | |
|---|---|
| எச்செயலையும் காலமறிந்து செய்வது சிறப்பு | ஞாலம் கருதினுங் கைகூடும் காலம் கருதி இடத்தாற் செயின். (குறள். 484) |
| எப்பொருளானாலும் அளவறிந்து கலம் ஏற்ற வேண்டும். மிஞ்சினால் அடித்தளம் மூழ்கிவிடும் | பீலிபெய் சாகாடும் அச்சிறும் அப்பண்டஞ் சால மிகுத்துப் பெயின் (குறள். 475) |
| அடக்க வேண்டியது நாக்கு அதுவே துன்பத்தின் மூலாதாரம் | யாகாவாராயினும் நாகாக்க காவாக்கால் சோகப்பர் சொல்லிழுக்குப் பட்டு. (கு:127) |
| உள்ள விருப்பத்தோடு ஒருவன் பிறருக்கு உதவி புரிவதனால் மகிழ்ச்சி மட்டுமின்றி மனநிறைவும் அடைகிறாள். | ஈத்துவக்கும் இன்பம் அறியார் கொல் தாமுடைமை வைத்திழக்கும் வன்க ணவர் (குறள்: 228) |

இவை போன்ற நீதிநூல் கருத்து ஒப்புமைகள் பல இவ்விரு நூல்களில் காணப்படினும் சில வேற்றுமைகளும் காணக்கிடக் கின்றன. ஈசியொடு பெண்களை நம்பாதே என்றும், அவர்களை நாய், நிலம், கடல், கழுதை, மரநாய், குதிரை, தேனீ, குரங்கு ஆகிய விலங்குகளிலிருந்தும், பொருள்களிலிருந்தும் படைக்கப் பட்டனர் என்கிறார். ஆனால் திருவள்ளுவரோ, பெண்ணின் பெருமைகளைப் பெண்ணின் பெருந்தக்க யாவுள? என்றும் பெண்ணே பெருமை உடைத்து! என்றும், 'பெண்ணின் பெருந்தக்கது இல்' என்றும் போற்றுவார்.

கிரேக்கத்தை அடுத்து வந்த செவ்வியல் மொழியான இலத்தீன் கால அமைவில் தமிழ்ச் சங்க காலத்தோடு பொருந்தி நிற்கிறது. வெர்ஜில் என்ற உரோமானியக் கவிச்சக்கரவர்த்தி வேளாண்மைத் தொழிலைப் பற்றி எழுதிய 'ஜார்ஜிக்ஸ்' (Georgics) எனும் நூல் திருக்குறளோடு ஒப்பத்தக்கதாய் உள்ளது. வெர்ஜில் எக்குலோக்ஸ் (Ecologoes) என்ற முல்லை நிலக் குறும்பாடலையும் பாடியுள்ளார். இந்நூல் பத்துப்பாட்டான முல்லைப் பாட்டுடன் ஒப்பத்தக்கதாய் விளங்குகிறது.

| **வெர்ஜில் (ஜார்ஜிக்ஸ்)** | **திருவள்ளுவர் (திருக்குறள்)** |
|---|---|
| நிலத்தினை நன்றாக உழுது கற்றாடவிட்டுப் பின்னர் உரம் இடுதல் வேண்டும் | தொடிப்புழுதி கஃசா உணக்கின் பிடித்தெருவும் வேண்டாது சாலப் படும் (குறள். 1037) |
| வயலில் அகல உழுவதோடு ஆழ உழுது எரு இடுதல் வேண்டும். | ஏரினும் நன்றால் எருஇடுதல் நட்டபின் நீரினும் நன்றதன் காப்பு (குறள். 1038) |



செவ்வியல் இலக்கிய வெளிப்பாடு மட்டுமன்றி உலகில் செவ்வியல் மொழிகளான கிரேக்கம், இலத்தீன் இலக்கியங்களில் காணலாகும் கருத்தமைவுகளாலும் திருக்குறள் ஒத்துள்ளது திருக்குறள் செவ்வியல் இலக்கியமே என்பதை மெய்ப்பிக்கிறது.

## தொகுப்புரை

திருக்குறள் செவ்வியல் இலக்கியம் என்பதற்குச் சான்றுகள்:

- நூல் தொகுப்பில், நீதி நூல் எனும் காரணத்தால் மட்டுமே திருக்குறள் பதினெண்கீழ்க்கணக்கு எனும் பிரிவில் சேர்க்கப்பட்டுள்ளது.
- திருக்குறள் இனம் சார்ந்து இயங்காது, உலகப் பொதுமறை யாய், செவ்வியல் இலக்கியத்தின் தனிப்பண்பாய் விளங்குகிறது.
- 133 அதிகாரப் பகுப்பு என்பது பிற்காலத்தில் ஏற்படுத்தப் பட்டதே; ஏனெனில் அவ்அதிகாரத்தின் தலைப்பினை அதிகாரத்துள் எங்கும் திருவள்ளுவர் எடுத்தாளவில்லை.
- திருக்குறளின் காலம் உறுதியாய் சங்க இலக்கியத்திற்கும் முற்பட்டது ஆகும். செவ்வியல் இலக்கியக் கால முறையில் திருக்குறள் என்றும் பொருந்தும்.
- செவ்வியல் இலக்கியங்களுக்குரிய தனிச் சொல்லாட்சித் திறன் திருக்குறளில் பல்வேறு இடங்களில் பயின்று வந்துள்ளது.
- செவ்வியல் இலக்கிய, வாய்மொழிக் கதைப்பாடல் கூறும் திருக்குறளில் காணக்கிடக்கிறது.
- செவ்வியல் இலக்கியக் கூறான புராணம் சார்ந்த கருத்தமைவு இலக்கியத்துடன் இணைந்தே இயங்கும் என்பது திருக்குறளிலும் வெளிப்பட்டுள்ளது.
- பெருங்காப்பியங்களுக்குரிய உவமைநயம், வருணனைத் திறன், திருக்குறளில் மிகச் சிறப்பாய் எடுத்தாளப்பட்டு செவ்வியல் இலக்கியமாய் முன்நிற்கிறது.
- செவ்வியல் மொழிகளான கிரேக்கம், இலத்தீன் இலக்கியங் களின் செவ்வியல் காலக் கருத்தமைவில் திருக்குறள் ஒப்புமை கொண்டுள்ளது.